

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக திருப்பத்தூர் & காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | திருப்பத்தூர் | எஸ்.ஆர்.கே.கன்வென்ஷன் ஹால், ஈத்கா ரோடு, (வடமலை பவன் பின்புறம்) திருப்பத்தூர். |
| 19.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-02-2025



# விமான நிலையம் - கிளாம்பாக்கம் வரை புதிதாக 13 மெட்ரோ ரயில் நிலையங்கள்:

## திட்ட அறிக்கைத் தயார்!

சென்னை,பிப்.15-

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்துக்கு பயணிகள் எளிதாக வந்து செல்லும் வகையில் அமைக்கப்படவிருக்கும் விமான நிலையம் கிளாம்பாக்கம் இடையே 13 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை மெட்ரோ இரயில் நீட்டிப்புக்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு அரசின் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். கே. கோபாலிடம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்1ல் விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை மெட்ரோ இரயிலை சாலை மேம்பாலத்துடன் இணைத்து நீட்டிப்பதன் பரிந்துரைக்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தமிழ்நாடு அரசின் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். கே. கோபால் அவர்களிடம், அரசு முதன்மை செயலாளரும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான மு.அ. சித்திக், சென்னை தலைமைச் செயலகத்தில் சமர்ப்பித்தார்.

மெட்ரோ இரயில் மற்றும் மேம்பாலச் சாலையின் ஒருங்கிணைந்த கட்டுமானத்தை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விரிவானதிட்ட அறிக்கை திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின்படி, மெட்ரோ வழித்தடம் நிலை 2இல் மற்றும் மேம்பாலச் சாலை நிலை1இல் முன்மொழியப்பட்டுள்ளது.

இது கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திற்கு தடையற்ற சாலைப் போக்குவரத்து மற்றும் மெட்ரோ இணைப்பை வழங்கும். வெளிவட்டச் சாலை (Outer Ring Road) உடன் இணைப்பதற்காக தாம்பரம் அருகே இடைநிலை சாய்வுப்பாதைகள் முன்மொழியப்பட்டுள்ளன. இந்த மேம்பாலச் சாலை நேரடியாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்குள் வந்து செங்கல்பட்டு வரை நீட்டிக்கப்படும்.

முன்மொழியப்பட்ட நீட்டிப்பு பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர் மற்றும் வண்டலூர் வழியாகச் செல்லும், இது கிளாம் பாக்கம் பேருந்து முனையம், விமான நிலையம் மற்றும் தாம்பரம் இரயில் நிலையம் போன்ற முக்கிய போக்குவரத்து மையங்களுக்கு இணைப்பை வழங்கும்.

விரிவான திட்ட அறிக்கையின் (DPR) முக்கிய அம்சங்கள்:

- வழித்தடத்தின் மொத்த நீளம்: 15.46 கி.மீ
- உயர்த்தப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை: 13
- மதிப்பிடப்பட்ட நிறைவு செலவு: ரூ. 9,335 கோடி. (மேம்பாலச் சாலை உட்பட) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தி.மு.க. மாணவர் அணி

### சென்னை மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் அவர்களின் பரிந்துரையின் பேரில், ஏற்கனவே மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திரு. எஸ். கார்த்திக் அவர்கள் அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்கு பதிலாக **கு. ஸ்ரீராம்,** (எண்.57, எஸ்.பி.எஸ். இரண்டாவது தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.) அவர்கள் துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளோடு இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 14.02.2025.

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



தலைமைச் செயலகத்தில் நேற்று (14.02.2025) வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தலைமையில் கடல் ஆமைகள் பாதுகாப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் துறைத்தலைவர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வன உயிரினம்) நாகநாதன், அரசு சிறப்பு செயலாளர் ரிட்டோ சிரியாக், மற்றும் வனத் துறை, மீன்வளத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அப்துல்மாலிக் சபா. இராசேந்திரன் தலைமையில்!

# கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரை!

கடலூர், பிப்.15-

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, நகர,பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி ஏற்பாட்டில் 09.02.2025 அன்று நெய்வேலி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ் குமார் வரவேற்புரை ஆற்றினார்.

மாநில இளைஞரணி துணை செயலாளர்மண்டலம் 2 பொறுப்பாளர் அப்துல் மாலிக், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் கலந்துகொண்டு சிறப்புரை யுடன் புதிதாக நியமனம் செய்யப்பட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகி கள், ஒன்றியக்கழக செயலாளர்கள், நகரகழக செயலாளர்கள், பேரூர்கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் என்.துரைராஜ், ராஜேஷ், நாராயணசாமி, சதாம்,பாரதி ராஜா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

மேலும், இந்நிகழ்வில் சமூக வலை தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலை தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினார்கள்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண்.எம்.1 / 0114 / 2025**
**இரண்டு எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களை மெரினா கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்ய ஆறு மாத காலத்திற்கு வாடகை முறையில் அமர்த்தும் பணி**

முன் வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **28.02.2025 பிற்பகல் 3.00 மணி**
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **03.03.2025 பிற்பகல் 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ / 597 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**


## தி.மு.க. மாணவர் அணி

### மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **கிருஷ்ணகிரி மேற்கு, ஓசூர் மாநகரம் – தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம்** ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஒசூர் மாநகரம்**

அமைப்பாளர் இ.இரத்தினசிங், எல்ஐஜி 511/3, ராகோட்டை ஹட்கோ, ஒசூர்.

துணை அமைப்பாளர்கள் 1) யு.அருள்குமார், எல்ஐஜி 1031, ராகோட்டை ஹட்கோ, ஒசூர். 2) எம்.முஹமத் ஷரிப், 83, சிப்பாய் பாளையம், ஒசூர். 3) ஆர்.ரஞ்சித்குமார், 86, பழைய மத்திகிரி, ஒசூர். 4) சி.பிரவீன் குமார், ஆச்சாரி லேஅவுட், ஒசூர். 5) ஜி.சுப்ரிதா, 3/207எ, ஆவலப்பள்ளி கிராமம், ஒசூர்.

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் அ.ராம்குமார், 888, 3 தெரு, மங்களபுரம், மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் 1) டி.விக்னேஷ்துரை, 2249, முனுசாமி கோவில் சந்து, சக்கநாயக்கன் தெரு, தஞ்சாவூர். 2) ஜி.சந்தோஷ்குமார், 1921, தாஸ்தாமால் சந்து, தஞ்சாவூர். 3) எஸ்.சூரியா, 3315, வானியத்தெரு, கரந்தை, தஞ்சாவூர். 4) டி.சி.எஸ்.எஸ்.சந்தோஷ்குமார், 173, கீழவண்டிக்காரத்தெரு, தஞ்சாவூர். 5) ப. பிரீத்தி, 65, அந்தோணியார் கோவில் தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 14.02.2025.

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம் கொளத்தூரில் உள்ள எரியில் குழந்தை எதிர்பாராத விதமாக விழுந்து பலியானது தகவல் அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் சி.ஜெ.சீனிவாசன் உள்பட பலர் உள்ளனர்.



சென்னை வடக்கு மாவட்ட கழக கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக் குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.